முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் தை மாதம் 3ம் திகதி முதல் தை மாதம் 10ம் திகதி வரை**

**(16.01.2022 ஞாயிறு முதல் 23.01.2022 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானலோகம் படைக்க வேண்டி
   ஞானமாக வந்த ஞானியே
   ஞானதேசிகனார் நீ கேட்க
   ஞாலமதில் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே பிலவ கலை திங்கள்
   தக்க சூல திகதி மேல் தசதிகதி வரை
   இன்னாளில் நடக்கும் நிகழ்வாக
   எதிர்கால பலன்குறித்த ஆசிதனை
3. ஆசிதனை அகத்தியனும் உரைப்பேன்
   அகிலமதில் பேரிடர் துன்பம்
   நசிவுதர நச்சுக்கிருமியாக அனுக
   நாட்டிடுவேன் இந்தியா தமிழகம்தனில்
4. தன்னிலே பாதுகாப்புக் கூடிட
   தக்க நடவடிக்கை தரும வழியில்
   மன்னர்களான ஆளுமை புரிந்திட
   மக்களின் உயிருக்கு பங்கமில்லா
5. பங்கமில்லா பாதுகாப்புக் கூடும்
   பாடிடுவேன் இந்தியா தமிழகமெங்கும்
   சங்கென பிரணவ நாத சப்தம்
   சர்வமாக விளங்கும்படி ஞானபூசை
6. பூசையதும் ஞானிகள் பூசையாக
   புகலுவேன் செய்து வருக
   நேசக்கரம்பட தான தருமத்தை
   நீதிவழுவாது கடைப்பிடித்து வர
7. வருகவே உயிர்பலி இனி இல்லா
   வளர்ச்சிப் பணிகளும் தேங்கா
   பொருளாதார வளம் கூடி
   புகலுவேன் பாதுகாப்பு மிக்க
8. மிக்கநல் ஞானபூமியாக மாறும்
   மேன்மையில்லா செயல்பாடாக
   தேக்கமுற தெய்வ சக்திகளைபூட்டி
   தெய்வநெறிக்கு தொடர்பங்கம் செய்தால்

9. செய்தால் இறைபலம் குன்றி
செப்பிடுவேன் ஆங்காங்கே அழிவு
அய்யமுற பேரிடராக உயிர்பலி
அளவிலா பெருகி இடர் காண்கும்
10. காண்கவே இறைபலம் தருமபலம்
கடமையாகக் கொண்ட ஆளுமையாக
ஆன்மீக ஞானவழி காட்டும்
அரங்கமகான் தயவுக்கு வர
11. வருகவே இந்தியா தமிழகமும்
வல்லமை கூடி பெரும் பாதுகாப்பாய்
முருகப்பெருமான் தலைமை ஏற்ற
மொழிகுவேன் ஞான ஆட்சிப்புரிய நேரும்
வாரஆசி முற்றே

–சுபம்–

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் தை மாதம் 3ம் நாள் 16.01.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் தை மாதம் 10ம் நாள் 23.01.2022 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நிகழ்வுகள்:

துன்பம் மிக்க கலியுகத்தை மாற்றியமைத்து ஞான லோகத்தினை உருவாக்கிட வேண்டியே முருகப்பெருமானின் அம்சமாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகரே மகாஞானியே தாம் எம்மிடம் இவ்வுலகின் எதிர்காலம் குறித்து கேட்கவே அகத்திய மகரிஷி யானும் இந்தியாதமிழகம் தன்னில் பிலவ வருடம் தைமாதம் 3ம் நாள் 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 10ம் நாள் 23.01.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இவ்வுலகினில் இயற்கை பேரிடராக நச்சுக்கிருமி தாக்குதல் உருவாகி மக்களை பெருந்துன்பத்தில் ஆழ்த்தி வருகின்றது. இந்தியா தமிழகம் பாதுகாப்புதனை அதிகப்படுத்திட வேண்டும். இந்தியா தமிழக ஆளுமைகள் நச்சுக்கிருமி பரவலை தடுக்க தருமத்தின் பாதையினால் ஆகிய தகுந்த நடவடிக்கைகளை எடுத்து மக்களுக்கு ஆதரவாய் செயல்பட மக்களின் உயிருக்கு பாதகம் இல்லாமல் நாட்டினில் பாதுகாப்பு பெருகிடும்.

இந்தியா தமிழகமெங்கும் ஓங்கார நாதம் ஒலிக்கும்படி கடவுள் நம்பிக்கை யோடு மக்கள் ஓங்காரஜெபத்தை, முருகப்பெருமானின் நாமஜெபங்களை அதிகமாக சொல்லிவருவதுடன் ஞானிகள் பூஜையாக ஓங்காரம் ஒலிக்க ஞானபூஜைகளை நாடெங்கிலும் செய்து வரவேண்டும். தான தருமங்களை மக்கள் நீதிநெறி வழுவாமல் கடைபிடித்து வரவேண்டும்.

இவ்விதம் செய்து வந்தால் நாட்டினில் இனிமேலும் உயிர்பலிகள் நடக்காமல் பாதுகாக்கலாம் ஞானிகள் ஆசியினால் உயிர்பலிகள் இல்லாமல் போவதோடு வளர்ச்சி பணிகளும் தடையின்றி நடந்து நாட்டின் பொருளாதார வளமும் பெருகிடும் தேசமே பாதுகாப்பு மிகுந்த ஞானதேசமாக மாறிடும்.

ஆலயங்களில் வழிபாடு செய்வதை முற்றிலும் தடை செய்யும் நிலையில் நாட்டினில் தெய்வ பலம் குறைந்து ஆங்காங்கே பல விரும்பத்தகாத இடர்கள் உண்டாகும் சூழல் உருவாகும்

நச்சுக்கிருமி தாக்குதலும் கட்டுப்பாடின்றி பெருகவும் சூழ்நிலை உருவாகி உயிர்பலிகள் உண்டாக நேரும்.

தெய்வ பலத்தையும் தருமபலத்தையும் நாட்டினில் உருவாக்குவதை கடமையாகக்கொண்ட ஆட்சியாளர்களாக ஆட்சி புரிவோர் இருக்க நன்மையாகும். தெய்வபலத்தையும் தர்ம பலத்தையும் கொள்கையாக கொண்ட ஆன்மீக வழிகாட்டும் அரங்க மகா தேசிகனாரின் ஆசிகளை பெற்று தர்மஞானவழியில் நடத்திட இந்தியா தமிழகம் வல்லமை பெருகி பெரும் பாதுகாப்பு மிக்க தேசமாக முருகப்பெருமானின் தலைமையை ஏற்று நடக்கும் ஞான ஆட்சியாக மாறி உலகமே சிறப்படையும் எனக்கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–